Press Release

**Wavin India Holdings Private Limited**

**Address (Registered office)**
Saket District Centre, District Mall Sector 6, Pushp Vihar
New Delhi, 110024, India

**Internet**
www.wavin.co.in

**E-mail**
wavinindia@wavin.com

# இந்தியாவில் நகரமயமாக்கல் வளர்ச்சிக்கான பிளம்பிங் மற்றும் வடிகால் தீர்வுகளின் சரியான கலவையை வேவின் வழங்குகிறது.

- உலோக-பிளாஸ்டிக் குழாய் இணைப்புகளுக்கான புதிய தரநிலைகளை நிர்ணயிக்கும் ஒலிக் கசிவு நுட்ப எச்சரிக்கை வசதியை வேவின் டைக்ரிஸ் K5/M5 ஆதரிக்கும்
- வேவின் AS+, வடிகால் தீர்வுகளில் ஒலியை உறிஞ்சக்கூடிய தனித்துவமான பண்புகளை அளிக்கிறது.

**புது தில்லி, நவம்பர் 22, 2021:** கட்டிடம் மற்றும் உள்கட்டமைப்புத் துறையில் குழாய்கள் மற்றும் பொருத்துதலுக்கான புத்தாக்கமான தீர்வுகளை வழங்கும் நிறுவனமான வேவின், இந்திய சந்தைக்கான இரண்டு புதிய தயாரிப்புத் தொடர்களை, வேவின் டைக்ரிஸ் K5/M5 பிளம்பிங்

தீர்வுகள் மற்றும் வேவின் AS+ குறைந்த இரைச்சல் கொண்ட வடிகால் அமைப்பு ஆகிய வடிவங்களில் அறிமுகப்படுத்துவதாக இன்று அறிவித்தது.

வேவின் AS சிஸ்டத்தின் வெற்றிகரமான 30 வருட பிளாஸ்டிக் குறைந்த இரைச்சல் பாரம்பரியத்தின் மீது கட்டமைக்கப்பட்ட, புதிய மேம்படுத்தப்பட்ட வேவின் AS+ ஆனது மண் மற்றும் கழிவு அமைப்புகளில் நவீனமுறையில் இரைச்சல் குறைப்பை வழங்குகிறது. இது பல மாடி கட்டிடங்களில் உள்ள இரைச்சல்மிக்க வடிகால் குழாய்களின் சிக்கலைக் கணிசமாகக் குறைப்பதுடன் நிறுவுதலில் எளிமை மற்றும் பெரிய மதிப்புகளின் மூலம் கட்டுமானப் பணியில் காலம் மற்றும் நிதிக் கட்டுப்பாடுகளைத் தீர்க்கும்.

**குறைந்த இரைச்சல் கொண்ட வடிகால் அமைப்பு: வேவின் AS+**

வேவின் AS+ ஆனது ஒரு தனித்துவமான உயர் அடர்த்தியான பொருளைப் பயன்படுத்தி

கட்டமைக்கப்பட்டதாகும். இது கட்டிட அமைப்பில் பிறக்கும் ஒலியை குறைக்க ஒரு பிரத்தியேகமான வேவின் லோ நாய்ஸ் பிராக்கெட்-ஐக் கொண்டுள்ளது. வேவின் AS+ கையடக்கமான மற்றும் குறுகிய இடைவெளிகளுக்கு ஏற்ற சிறிய வடிவமைப்பைக் கொண்டுள்ளது. ஒரு செதுக்கப்பட்ட ஸ்பிகோட் வடிவமைப்புடன் கூடிய இது தள்ளு விசையை கணிசமாகக் குறைக்கிறது. மேலும் செல்ஃப்-லூப்ரிகேட்டட் காப்பு நீல முத்திரையானது அமைதியான செயல்திறன், மிக இலகுவான, கசிவு மற்றும் தோல்விகளற்ற நிறுவுதல் ஆகிய இரண்டையும் உறுதி செய்கிறது. மேலும், திட்டமிடல் செயல்முறையை ஆதரிக்க, வேவின்-இன் புதிய சவுண்ட்செக் டூல் ஆனது, நிறுவுதலின் இறுதிக்கட்டத்தில் செயற்கை ஒலியை உருவகப்படுத்துவதன் மூலம் எப்போதும் மாறிவரும் இரைச்சல் ஒழுங்குமுறைகளை சமாளிக்க எளிதான ஆறு படிகள் கொண்ட வழியை வழங்குகிறது.

வேவின் AS+ மற்றும் வேவின் டைக்ரிஸ் K5/M5-இன் இந்தியா அறிமுகம் பற்றி **வேவின் ஆசியா பசிஃபிக்-இன் தலைவர் திரு. ஃப்ரீக் க்ரம்**, “எங்கள் வேவின் AS+ மற்றும் வேவின் டைக்ரிஸ் K5/M5 சிஸ்டங்களின் சமீபத்திய பதிப்பைப் பற்றி நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். வாடிக்கையாளரின் பின்னூட்டம் மற்றும் சரியான பொருட்கள் மற்றும் வடிவமைப்பிற்கான ஆராய்ச்சியில் அதிக நேரத்தையும் முயற்சியையும் நாங்கள் முதலீடு செய்துள்ளோம். வேவின் AS+ ஆனது பிளாஸ்டிக் குறைந்த இரைச்சல் வடிகால் அமைப்பிற்கான ஒரு முழு புதிய அளவிலான செயல்திறனைக் குறிக்கிறது. மற்றும், இது பொறியாளர்கள் மற்றும் நிறுவுபவர்களுக்கான ஒரு பொருத்தமான தீர்வாகும்.” என்று கூறினார்.

“மறுபுறம், வேவின் டைக்ரிஸ் K5/M5 ஆனது இத்துறையின் முதலாவதான **ஒலிக் கசிவு எச்சரிக்கை** வசதியுடன் அதன் முன்னோடியான வேவின் டைக்ரிஸ் K1/M1 ஃபிட்டிங்-க்கு மேலானதாக உள்ளது. மேலும் இது காற்றழுத்த சோதனை நுட்பத்தைக் கொண்டுள்ளது.

இனிமேல் கட்டுமான நிறுவுதல் நிலையில் இது ஒரு தடையாக இருக்காது. மேலும், சோதனை மற்றும் பயன்பாட்டிற்கு இடைப்பட்ட காலத்தில் காற்று கசிவு சோதனையினால் உண்டான பாக்டீரியாவின் வளர்ச்சி (லெஜியோனெல்லா) போன்ற பல்வேறு சிக்கல்கள், நீர் தேக்கத்தின் காரணமாக அசுத்தமான பணியிடம் தவிர்க்கப்படுகிறது. இரண்டு தயாரிப்புகளும் நகரமயமாக்கல் வளர்ச்சியை ஆதரிப்பதற்கான ஒரு முக்கிய படியாக இருப்பதுடன் மற்றும் நிறுவுபவர்களுக்கு இந்தியாவில் உயர்மட்ட தொழில்முறை நிறுவுதலை வழங்கும்." என்று அவர் மேலும் கூறினார்.

**இது சாதாரண ஃபிட்டிங்ஸ் மட்டுமல்ல: வேவின் டைக்ரிஸ் K5/M5**

வேவின் டைக்ரிஸ் K5/M5, ஒரு புத்தம்-புதிய பிரஸ் ஃபிட்டிங்ஸ் சீரீஸ்-ஆனது, உலோக-பிளாஸ்டிக் குழாய் இணைப்புகளுக்கான புதிய தரநிலைகளை நிர்ணயிக்கும் ஒரு தனித்துவமான ACOUSTIC LEAK ALERT அம்சத்தைக் கொண்டுள்ளது. ஒரு ACOUSTIC LEAK ALERT

வசதியைக் கொண்டுள்ள உலகின் முதல் ஃபிட்டிங் இதுவாகும். தண்ணீருக்குப் பதிலாக காற்றைக் கொண்டு நடத்தப்படும் கசிவுச் சோதனையில், ஒரு அழுத்தப்படாத ஃபிட்டிங், எளிதாக கண்டுபிடிப்பதற்கான உரத்த மற்றும் தெளிவான விசில் ஒலியை ( +/- 80 dBA) உருவாக்கும்.

OPTIFLOW என்னும் அதிகரித்த உள் துளையுடன், வேவின் டைக்ரிஸ் K5/M5 ஆனது இந்த வகையின் பாயும் செயல்திறனில் சிறந்ததாகும். மேலும் நம்பகமான பிரஸ் இணைப்புக்காக, புதிய டைக்ரிஸ் கே5/எம்5 ஆனது MULTIJAW-வைக் கொண்டுள்ளது, அதாவது U மற்றும் UP, TH, H மற்றும் B போன்ற மிகவும் பொதுவான அழுத்துவதற்கான ப்ரோஃபைல்-உடன் இப்போது ஃபிட்டிங்ஸ்-ஐ அழுத்தலாம். இது நிறுவுபவர்களை கருவிகளை மாற்றாமல் அவர்களின் சிஸ்டம் உத்தரவாதத்தை பராமரிக்காமல் வேவினுக்கு மாற அனுமதிக்கிறது. நம்பகத்தன்மை மற்றும் நிறுவுதலில் எளிமை ஆகியவை இத்துறையின் வளர்ச்சியின் முக்கிய கூறுகளாகும். நிறுவுதலை

முடிந்தவரை எளிதாகவும் நம்பகத்தன்மையுடனும் செய்ய, குழாய் சரியாகச் செருகப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க, இந்த ஃபிட்டிங் IN4SURE, 360° பைப் விசிபிளிட்டி-யை உள்ளடக்கியுள்ளது. இது EASYFIT-ஐயும் உள்ளடக்கியுள்ளது, அதாவது குழாய்களை துண்டாக்கிய பிறகு காலிப்ரேட்/சேம்ஃபர் செய்ய வேண்டிய அவசியமில்லை.

கட்டிடம் மற்றும் உள்கட்டமைப்புத் தொழிற்துறையில் 60 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், வேவின்-இன் வேவின் AS+ மற்றும் வேவின் டைக்ரிஸ் K5/M5 ஆகியவற்றின் அறிமுகமானது, உலகின் மிகப்பெரிய மற்றும் வேகமாக வளர்ந்து வரும் பிராந்தியத்தின் நீர் விநியோகத் தேவைகள் மற்றும் நகரமயமாக்கலைப் பூர்த்தி செய்வதற்கான அதன் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

**வேவின் – ஒரு சிறு குறிப்பு**

வேவின் என்பது பல கண்டங்களில் உள்ள கட்டிடம் மற்றும் உள்கட்டமைப்புத் துறைக்கான ஒரு புத்தாக்கமான தீர்வு வழங்கும் நிறுவனமாகும். 60 ஆண்டுகளுக்கும் மேலான நிபுணத்துவத்தைப் பின்புலமாகக் கொண்ட இந்நிறுவனம், பாதுகாப்பான மற்றும் திறமையான நீர் வழங்கல், தூய்மை மற்றும் சுகாதாரம், காலநிலை-எதிர்ப்பு நகரங்கள் மற்றும் சிறந்த கட்டிட செயல்திறன் ஆகியவற்றில் உலகின் மிகப்பெரிய சவால்களில் சிலவற்றைச் சமாளிக்கத் தயாராக உள்ளது. வேவின்-இல், உலகில் நேர்மறையான மாற்றத்தை உருவாக்குவதில் நாங்கள் கவனம் செலுத்துவதுடன், எங்களின் தீவிரமான ஆர்வமானது ஆரோக்கியமான, மற்றும் சுற்றுப்புற சூழலை உருவாக்குவதாகும். நகரங்களை எதிர்காலத்திற்கேற்றதாகவும், கட்டிடங்களை வசதியாகவும் ஆற்றல் திறன் கொண்டதாகவும் மாற்றுவதற்காக நகரத் தலைவர்கள், பொறியாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் நிறுவுபவர்களுடன் நாங்கள் முழுமூச்சுடன் ஒத்துழைக்கிறோம். வேவின்,

ஓர்பியா-வின் ஒரு அங்கமாகும். இது ஒரு பகிரப்பட்ட நோக்கத்தால் ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனங்களின் ஒரு சமூகமாகும்: உலகம் முழுவதும் வாழ்க்கையை முன்னேற்றுவதற்காக. வேவின் உலகளவில் 37 நாடுகளில் 10,500+ பணியாளர்களைக் கொண்டுள்ளது.

**மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:**

யோகேஷ் குமார் @ வேவின் இந்தியா

ஆஷிஷ் ராஜ்புத் @ MSL

ஏஞ்சலா Wu @ வேவின் APAC

எமியல் வான் டென் பூமென் @ வேவின் குளோபல்